2023 ஜனவரி 13]

திரு. ஜோசப் சாமுவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாடிக்குப்பம் இரயில் நகர் மற்றும் பூந்தமல்லி நெடுஞ்சாலையை இணைக்கும் சிதிலமடைந்திருக்கும் தரைப் பாலத்தை அகற்றி உயர்மட்ட பாலமாக அமைக்க நில எடுப்பிற்கு நிருவாக ஒப்புதல் ரூ.2 கோடிக்கு பெறப்பட்டுள்ளது என அறிகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்ட சிதிலமடைந்த இந்தத் தரைப் பாலத்தை உயர்மட்ட பாலமாக அமைக்க இந்த ஆண்டே அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல முறை நான் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். தரைப் பாலங்களை எல்லாம் உயர்மட்ட பாலங்களாக ஆக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து, இந்த ஐந்தாண்டு காலத்தில் அவற்றை முடித்துவிட வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டு, இந்த நிதியாண்டில் பல பாலப் பணிகளை எடுத்திருக்கிறோம். எஞ்சியிருக்கிற ஏறத்தாழ 400 தரைப் பாலங்களை உயர்மட்ட பாலங்களாக ஆக்க வேண்டியுள்ளது. அதில் ஒரு பாலமாகத்தான் இது இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்த நிதியாண்டிலே அதனையும் சேர்த்துக் கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

வர்த்தக மையம்

***22025—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2023 ஜனவரி 13

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர் இடையே வர்த்தக மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் இணைந்து உருவாக்கிய தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனம், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டத்தில் வர்த்தக மையத்தை நிறுவ, இந்நிறுவனத்தின் குழுமம் கொள்கை அளவு ஒப்புதல், in-principle approval *வழங்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனம், தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

முற்பகல் 10–40

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் குறிப்பாக ஒசூரை எடுத்துக் கொண்டால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன. இங்கு* Katerra, Mylan, Delta, Ola, TATA, TVS, Titan *போன்ற பெரிய கம்பெனிகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தொழில் நகரமாக கிருஷ்ணகிரி மாவட்டம் இருக்கின்றது. இந்த வர்த்தக மையத்தை நீங்கள் அமைப்பீர்கள் என்று சொன்னால், அந்த மையத்தின் மூலமாக அண்டை மாநிலங்கள், அதேபோல உலகளவில் இருக்கின்றவர்களெல்லாம் வந்து பார்த்துச் சென்று உற்பத்தியைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல், நாம் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பும் கிடைக்கும் என்பதற்காக இந்த மையத்தை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 ஜனவரி 13]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அசோக்குமார் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்து, நல்ல கருத்து. ஓசூர், மிகப் பெரிய அளவிலே வளர்ந்து வரக்கூடிய தொழில் நகரமாக உருவெடுத்திருக்கிறது. தமிழ்நாட்டிலே இந்தளவிற்கு மிக வேகமாக வளர்ந்து வரக்கூடிய நகரங்களை எடுத்துப் பார்த்தால், ஓசூர் அளவிற்கு வேறு நகரங்கள் வர முடியாத அளவிற்கு இப்போது பெரிய அளவில், உலகளாவிய வகையில் வளர்ந்து வரக்கூடிய முக்கியமான நகரங்களில் ஒரு நகரமாக ஓசூர் கண்டறியப்பட்டிருக்கிறது. ஓசூரின் அமைப்பு, அதனுடைய தொழில் சூழல், புவியியல் அமைப்பு, அருகில் இருக்கக்கூடிய பெங்களூரு போன்ற நகரங்களோடு அதற்கு இருக்கக்கூடிய தொடர்பு, தொழில்நுட்ப வசதிகள் இவற்றையெல்லாம் கருத்திலே கொள்கிறபோது, ஓசூரை மிகச் சிறந்த அளவிலே, ஒரு தொழில் நகரமாக உருவாக்குவதற்கு மென்மேலும் அங்கு வசதிகள் செய்வதற்கு அரசு ஆர்வத்தோடு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, அமையக்கூடிய வர்த்தக மையம் எல்லாவிதமான வசதிகளையும், இப்போது இருக்கக்கூடிய நவீன தொழில்நுட்ப வசதிகளையும் உள்ளடக்கியிருக்கக்கூடியதாக உருவாக்குவதற்கு அரசு எல்லா வகைகளிலும் அதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள அத்தனை தொழிற்சாலைகளிலும் 75 சதவிகித தமிழ் மக்களை பணியில் அமர்த்த வேண்டும் என்ற சட்டத்தை எப்போது கொண்டு வருவீர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே தமிழ்நாட்டினுடைய தொழில் துறை, நம்முடைய தமிழ்நாட்டிலே இப்போது அமைக்கப்படக்கூடிய தொழில் முதலீடுகள் குறித்து ஓர் ஆய்வினை நடத்தியிருக்கிறது. அமைக்கப்பட்டிருக்கக்கூடிய தொழிற்சாலைகள் மற்றும் வரக்கூடிய தொழிற்சாலைகளிலே குறிப்பாக இப்போது நாம் இரண்டு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேலாக முதலீடுகளைப் பெற்றிருக்கிறோம். அதன்மூலம் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னால், அதிலே நம்மைச் சார்ந்தவர்கள் Tamil domicile என்று சொல்வார்கள், அதைப்போல தமிழ்நாட்டினைச் சார்ந்தவர்கள், தமிழை தாய் மொழியாகக் கொண்டு நம்முடைய தமிழ்நாட்டில் வசிக்கக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தி வந்தோம். இப்போது இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய தொழிற்சாலைகளிலே தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்ற ஓர் ஆய்வில், ஏற்கெனவே வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவர்களில் 80 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதுதான் அந்த ஆய்வின் முடிவு. அந்த வகையில், தொழில் துறை ஒரு நீண்ட ஆய்வினை எல்லா இடங்களிலும் செய்து, அதற்கான முடிவுகள் வந்திருக்கின்றன. எனவே, வாய்ப்புகளை வழங்குகின்றபோது தமிழ்நாட்டினைச் சார்ந்தவர்கள், இங்கே இருக்கக்கூடியவர்களுக்குத்தான் வேலைவாய்ப்புகளிலே முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு உறுதியோடு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.

டாக்டர் நா. எழிலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முதலீடுகளில் புரட்சி செய்யும் நம்முடைய கழக அரசுக்கு வாழ்த்தைத் தெரிவித்துக்கொண்டு, நம் தமிழர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதுபோல், தொழிற்சாலைகள், வர்த்தக மையங்களை உருவாக்கும்போது திராவிட மாடல் ஆட்சியின்மூலம் அவ்வாறு தனியார் துறையிலும் 69 சதவிகித இட ஒதுக்கீட்டில், தொழிற்சாலைகளில் பணி நியமனம் செய்ய அரசாங்கம் ஒரு கொள்கையைக் கொண்டு வர முடியுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

2023 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்போது தொழிற்பூங்காக்களை உருவாக்குகிறபோது அதை ஒரு* Integrated Industrial Park *ஆகத்தான் உருவாக்கப் பார்க்கிறோம். வெறுமனே ஒரு தொழிற்பூங்கா மாத்திரமல்லாமல், அந்தத் தொழிற்பூங்காவில் எல்லாவிதமான வசதிகளையும் உள்ளடக்கி இருக்கக்கூடிய வகையிலே தொழிற்பூங்காக்கள் இப்போது உருவாக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்; அதற்கான சட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசு, சமூக நீதிக் கொள்கைகளிலே தீவிரமான நம்பிக்கையுடைய அரசு; அதற்கான திட்டங்களை முன்னெடுக்கக்கூடிய அரசு. எனவே, நிச்சயமாக வரக்கூடிய காலங்களிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, அதுகுறித்த முன்னெடுப்புகளை எடுப்பதற்கு அரசு உரிய வகையில் ஆராயும். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூரில்* TATA Electronics Company*மூலம்* cell phone *தயாரிக்கின்ற தொழிற்சாலையிலே ஆறாயிரம் மகளிருக்கு வேலை தருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஆறாயிரம் மகளிரைத் தேர்ந்தெடுப்பது குறித்து கிராமங்களில் இருக்கின்ற பெண்களுக்கு இன்னும் தெளிவாகத் தெரியாமல் இருக்கிறது. ஆகவே, அனைத்து மாவட்டங்களிலும் கம்பெனிக்கு ஆள் எடுப்பதற்கு தொழில் துறையின்மூலம் அறிவுறுத்தி, வேலைவாய்ப்புத் துறைமூலம் ஆங்காங்கு பெண்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, ஆறாயிரம் பேருக்கு வேலை அளிக்கின்ற வாய்ப்பினை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

[2023 ஜனவரி 13

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒசூரிலே அமையக்கூடிய டாடா நிறுவனத்தினுடைய expansion plan எல்லாவற்றையும் பார்த்தால் 6,000 மட்டுமல்ல, அதற்கு கூடுதலாகவே, 15,000 பேருக்கும் மேலாகவே, வேலைவாய்ப்பு வரக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இந்தத் தொழிற்சாலைகளில், Ola Electric நிறுவனமாக இருந்தாலும் அல்லது TATA Electronics Company ஆக இருந்தாலும், அதிகளவிலே மகளிருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய வகையில், அங்கே வேலைவாய்ப்புகள் பெருகி இருக்கின்றன. TATA Electronics நிறுவனத்தைப் பொறுத்தமட்டிலே அந்தப் பகுதியில் மாத்திரமல்ல, தமிழ்நாட்டினுடைய பல பகுதிகளிலும் வேலைவாய்ப்புகளுக்கான நேர்முகத் தேர்வினை அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். விருதுநகர் மாவட்டமாக இருந்தாலும், மதுரை மாவட்டமாக இருந்தாலும், அதேபோல தென்பகுதிகளில் இருக்கக்கூடிய மாவட்டங்களிலும் பல பகுதிகளில் நேர்முகத் தேர்வு நடத்தி அதன் வாயிலாக வேலைக்கு இங்கே சேர்ந்திருக்கிறார்கள். அதுகுறித்த முழு விவரங்களையும் டாடா நிறுவனம் ஒரு விளம்பரமாகவே வெளியிட்டிருக்கிறது. தொடர்ந்து அந்த நிறுவனத்திலே நம்முடைய பகுதியைச் சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிப்பதிலும் தங்களுடைய விருப்பத்தை, தங்களுடைய முயற்சியைத் தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, வரக்கூடிய காலங்களில், யார் யாரெல்லாம் பணியில் சேர விரும்புகிறார்களோ அவர்கள் அங்கு வேலை பெறுவதற்கு, குறிப்பாக மகளிர் வேலை பெறுவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. தொழில் துறை மாத்திரமல்ல, தொழிலாளர் நலத் துறையின் மூலமாக நடக்கக்கூடிய வேலைவாய்ப்பு முகாம்களின் வாயிலாகவும் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, இரண்டு துறையினரும் இணைந்து அதற்கான முன்னெடுப்புகளை நிச்சயமாக மேற்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள்.

2023 ஜனவரி 13]

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அருகில் Amway என்ற கம்பெனி புதிதாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது. மத்திய அரசு, வரிவிதிப்பின் காரணமாக, அந்தக் கம்பெனியை மூட வேண்டுமென்று ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகச் செய்தித்தாளில் வந்திருக்கிறது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? ஏற்கெனவே, நோக்கியா கம்பெனியும் இதுபோன்ற double taxation முறையிலேதான் மூடப்பட்டது. அதுபோன்ற ஒரு சூழ்நிலை. அந்த நிறுவனத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதுகுறித்து அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய இந்தக் கருத்து அரசுக்கு முறையாக வரப்பெறவில்லை. அந்த நிறுவனம் மூடப்படுகின்றதா; என்ன காரணத்தினால் மூடப்படக்கூடிய சூழல் உருவாகியிருக்கிறது; வேறு பல காரணங்கள் இருக்கின்றனவா என்பது குறித்தெல்லாம் அரசுக்கு முறையான தகவல் இதுவரை வரவில்லை. அத்தகைய தகவல் வரப்பெறும் என்று சொன்னால், அந்த நிறுவனத்தில் பணிபுரிபவர்களுக்கு, அவர்களுடைய வேலைவாய்ப்புக்கு நிச்சயமாக பாதகம் இல்லாத வகையில், அவர்களுடைய வேலைவாய்ப்பை உறுதி செய்யக்கூடிய வகையில், நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே, இதுகுறித்த முன்னுதாரணங்களையும் நீங்கள் இங்கே சரியான வகையிலே சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். எனவே, அதுபோன்ற ஒரு சூழ்நிலை வந்துவிடாத வகையில், அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

[2023 ஜனவரி 13

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் தமிழகத்தினுடைய பகுதியிலே வேலைவாய்ப்புக்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும் அம்மாவினுடைய அரசில், மதுரை–தூத்துக்குடி* Industrial corridor *அமைக்க மானியம் கொடுக்கப்பட்டு, அதற்கான இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணையும் வெளியிடப்பட்டது. இது மூலக் கேள்விக்கு தொடர்பில்லையென்றாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிந்த காரணத்தினாலே, அந்தத் தொழில் முதலீட்டுக்காக தற்போது அரசு ஏதேனும் தனிக் கவனம் செலுத்துகிறதா; அந்த அரசாணையைச் செயல்படுத்துவதற்கு அரசு முன்னுரிமை வழங்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், தென் மாவட்டங்களினுடைய பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்ற வகையில், தென் மாவட்டங்கள் தொழில் வளர்ச்சி பெற வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தபோதுதான், மறைந்த முன்னாள் நீதியரசர் திரு. இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், தென் மாவட்டங்களினுடைய தொழில் வளர்ச்சிக்கு, முக்கியமாக மதுரையிலிருந்து சென்னை வரை* industrial corridor, *தொழில் வழித்தடம் உருவாக்கப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது.*

அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவிலே இடம் பெறக்கூடிய வாய்ப்பை அன்றைக்கு நான் பெற்றிருந்தேன். எனவே, அந்தக் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில், industrial corridor, *குறிப்பாக மதுரைக்கும், தூத்துக்குடிக்கும் இடையிலே உருவாக்கப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் அண்ணன் திரு. உதயகுமார் அவர்கள் சொன்னதைப்போல, அந்த வழித்தடம் தொடர்ச்சியாக அமைக்கப்பட வேண்டுமென்று*

2023 ஜனவரி 13]

தொழில் துறையினுடைய சார்பிலே முடிவுகள் எடுக்கப்பட்டு, கடந்த ஆட்சிக் காலத்தில், அதற்காக ஒரு Special Purpose Vehicle (SPV) உருவாக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அந்த வழித்தடத்தில் தொழில் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதற்கு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வந்தன. இன்றைக்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, தொழில் முதலீடுகள் என்பது, ஒரு சமச்சீர் தன்மை வாய்ந்ததாக தமிழ்நாடு முழுவதும் பரவலாக வர வேண்டும். ஒரு equitable growth என்று சொல்வார்கள். அதேபோல தொழில் வளர்ச்சி என்பது, ஒரு குறிப்பிட்ட பகுதியில் மாத்திரம் வரக் கூடாது. எல்லா இடங்களுக்கும் வர வேண்டுமென்றுதான், இப்போது அதை *4* clusters ஆக உருவாக்குகிறோம்.

முற்பகல் 10–50

அதாவது, western cluster, southern cluster என்ற முறையில் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கின்றபோது, தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து, வரக்கூடிய முதலீடுகள் பெருமளவிலே தென்மாவட்டங்களுக்கு வருவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, தூத்துக்குடிக்கும், மதுரைக்கும் இடையே இருக்கின்ற இந்தத் தொழில் வழித்தடம், industrial corridor-லே நிச்சயமாக, பல தொழிற்சாலைகள் வருவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. இன்னும், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், நேற்றையதினம் இந்த அவையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், சேது சமுத்திர திட்டம் இங்கே வரும் என்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, இன்னும் பல பெரிய தொழிற்சாலைகள் அந்தத் தொழில் வழித்தடத்திலே வருவதற்கான மிகப் பெரிய வாய்ப்புகள் இருக்கின்றன. இப்போதும் நிறைய தொழிற்சாலைகள் வந்துகொண்டிருக்கின்றன. தொடர்ச்சியாக தொழிற்சாலைகள் வருவதற்கு அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *25*, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.